### மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த – டெல்லியில் முற்றுகைப் போராட்டம் நடத்தச் சென்ற தமிழ்நாடு விவசாயிகள் நாக்பூரில் கைது!

# ஜனநாயக வழியில் போராடும் உரிமையைப் பறிப்பதா?

## வலைதளப் பதிவில் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஆக.3-**

**மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த - டெல்லியில் முற்றுகைப் போராட்டம் நடத்தச் சென்ற தமிழ்நாட்டு விவசாயிகள் நாக்பூரில் மகராஷ்டிர அரசால் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து வலைதளத்தில் பதிவிட்டுள்ள சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “ஜனநாயக வழியில் போராடும் உரிமையைப் பறிக்கக் கூடாது” என்று குறிப்பிட்டுள்ளார்.**



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று டெல்லியில் முற்றுகைப் போராட்டம் நடத்துவதற்காக ரயிலில் சென்ற தமிழ்நாட்டு விவசாயிகளை நாக்பூரில் கைது செய்துள்ள மகாராஷ்டிரா மாநில காவல்துறையை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மேகதாது விஷயத்தில் தொடக்கம் முதலே கர்நாடகாவுக்கு ஆதரவாக ஒருதலைபட்சமாகச் செயல்படும் நீர்வளத் துறையின் போக்கை கண்டித்து தான் தமிழ்நாட்டு விவசாயிகள் முற்றுகைப் போராட்டத்தை அறிவித்தனர்.

ஆனால், அவர்கள் ரயிலில் சென்று கொண்டிருக்கும் போதே நடுவழியில் இறங்க வைத்து, தமிழ்நாட்டுக்கே திரும்பிச் செல்லுங்கள் எனக் கட்டாயப்படுத்தி உள்ளது மகாராஷ்டிர காவல்துறை.

நாக்பூரில் கைது செய்யப்பட்டுள்ள நம் விவசாயிகளை உடனே விடுவிக்க தமிழ்நாடு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நம் விவசாயிகளைக் கைது செய்த மகாராஷ்டிர அரசிடம் அதற்கான விளக்கத்தைக் கேட்பதுடன், இனி இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கானஉறுதியைப்பெறவேண்டும்.

டெல்லி சென்று போராட அவர்களை ஒன்றிய அரசு அனுமதிக்க வேண்டும்.

ஜனநாயக வழியில் போராடும் உரிமையைப் பறிக்கக் கூடாது.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.




ஆலந்தூர் தெற்கு பகுதி, நங்கநல்லூரில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன் தலைமையில் தளபதி கம்ப்யூட்டர் அகாடெமியில் பயின்ற 150 மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினார்கள். அருகில் மாநில வர்த்தக அணி அமைப்பாளர் காசி முத்துமாணிக்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.என்.பி.வெங்கட்ராமன், பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், ப.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சாய் ஜெய்காந்த் பாரதி, வட்ட கழக செயலாளர்கள் ஜெ.நடராஜன், கே.பி.முரளிகிருஷ்ணன், வேலவன், சாலமன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஆர்.ஆர். ஜெயராம் மார்த்தாண்டன் தலைமை! என்.சந்திரன் – பா.குணாளன் முன்னிலை!

# தளபதி இலவச கம்ப்யூட்டர் அகாடமியில் பயின்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினர்!

சென்னை, ஆக.3-

இலவச தளபதி கம்ப்யூட்டர் அகாடெமியில் பயின்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழாவிற்கு காஞ்சி வடக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர். ஆர். ஜெயராம் மார்த்தாண்டன் தலைமையில், 02.08.2026 ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 11:30 மணி அளவில் நங்கநல்லூர் 100 அடி சாலையில் அமைந்துள்ள என். வி.ஆர் திருமண மஹாலில் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர், 12வது மண்டல குழு தலைவருமான, என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் பா. குணாளன் முன்னிலையில், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான, தா.மோ. அன்பரசன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர், கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி அமைப்பாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம், முன்னால் சட்டமன்ற உறுப்பினர் வி.என்.பி.வெங்கட்ராமன, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி பிரகாஷ், மாநில சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் சாய் காந்த் பாரதி, எஸ். ஆர்.ரவி, அம்மன் வைரமுத்து, வட்ட கழக செயலாளர்கள் ஜெ.நடரா ஜன், இ.உலகநாதன், ஏ.வேலவன், ஏ.ஆர். சரவணா, மாவட்ட பிரதிநிதி கள், மாமன்ற உறுப்பினர் ஏ.சாலமோன், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட, அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, நிர்வாகிகள், மற்றும் மூத்த கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### சென்னை கிழக்கு மாவட்டம் – துறைமுகம் சட்டமன்றத் தொகுதி

# பாக இளைஞரணி ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!




*சென்னை, ஆக.3-*

*சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி பாக இளைஞரணி ஒருங்கிணைப்பாளர்கள் (BYO) கலந்துரையாடல் கூட்டம் நேற்று (02-08-2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில் சென்னை, பாரிமுனை, துறைமுகம் சட்டமன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் பி.கே.சேகர் பாபு கலந்து கொண்டு பாக இளைஞரணி ஒருங்கிணைப்பாளர்களுடன் (BYO) கலந்துரையாடினார்.*

*இக்கலந்துரையாடலில் துறைமுகம் கிழக்கு - மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.ராஜசேகர், எஸ். முரளி, ஜி.எம்.தேவன், பி. ஸ்ரீராமுலு, இப்ராஹிம் கனி, இரா.கலைச்செல்வி, நா.ரஞ்சித் விஜயாலயன், பி. விஜயகுமார், பா.பரதீப் குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், வட்டக் கழக செயலாளர்கள் ஆ.நா. பார்த்திபன், கே.கவியரசு, எல்.சத்யநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, மா.ஜெய்சங்கர், பா. கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராம்மூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதீஷ்கு மார், வே.பா.பிரபாகரன், ஆர். பி.ரமேஷ், பி.செந்தில் குமார், ஆர்.விஜய் மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் முன்னோடிகள், 192 பாக இளைஞரணி ஒருங்கிணைப்பாளர்கள் (BYO) கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

### களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

# ஜாபர்கான்பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்!

## திருவுருவச்சிலைக்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

*சென்னை, ஆக.3-*

*சைதை, ஜாபர்கான்பேட்டை 139 வது வட்டம். கெங்கையம்மன் கோவில் அருகில் உள்ள தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 7-8-2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 7 மணிக்கு, தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில் பகுதிச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி, அட்கோ கமலநாதன், சை.மு.சேகர் ஆகியோர் முன்னிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.*

*இந்நிகழ்ச்சியில் மு.மகேஷ்குமார், எஸ். குணசேகரன், பா.அன்பரசன், எம்.ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், எம்.எஸ். ஹரிபாபு, டி.என்.சிவமணி, சைதை ஏ.சம்பத், வி.பி.ஜானகிராமன், ஆர். ரமேஷ், கவிதா கௌதமன், சைதை சாதிக், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, நா. மணிகண்டன், ஆர்.கிருஷ்ண குமார், நரேஷ்குமார், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், த.மணி, மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ்.முருகன், அ.அயாத்பாஷா, சாந்தி சுந்தரம், இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், பூபதிவெங்கடேசன், சுமதி தீனதயாளன், எல்.சந்திரன், சி.டி.காசிநாதன், க.முரளி, வி.சபரி, அ. சுப்பிரமணி, து.செஷ சுரேஷ், டி.கோ பாலகிருஷ்ணன், எஸ்.முகம்மது அலி, ஜி.ஏழுமலை, யமஹா ராஜேஷ், ஜிம். பிரபு, ம.திலீப்பன், க.ரஞ்சித் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*பாபு எல்லப்பன் நன்றி கூறுகிறார்.*

*நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.*

# உடன்குடி பா.ஜ.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

## முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் முன்னிலையில்!



*உடன்குடி, ஆக.3-*

*உடன்குடி கிழக்கு ஒன்றியம்-பா.ஜ.க. நிர்வாகிகள் முன்னாள் அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். சோடா ரவி, அயலக அணி துணை அமைப்பாளர் டேனியல் ஜெபசிங், திருச்செந்தூர் நகர துணைச் செயலாளர் மகாராஜன் ஆகியோர் ஏற்பாட்டில் கீழ நாலு மூலைக் கிணறு கிராம பா.ஜ.க. தலைவர் ராகுல் ஊடக பிரிவு கிளை செயலாளர் முத்து சிவக்குமார், மண்டல பிரிவு கிளை செய லாளர் சூரியா, உறுப்பினர்கள் அர்ச்சுனன், சந்தோஷ், உதயநிதி, சரண், நவின் குமார், முத்து ராஜா, கங்கா துரை அக்கட்சி யிலிருந்து விலகி தண்டுபத்து அலுவலகத்தில் முன்னாள் அமைச்சரும் தெற்கு மாவட்ட தி.மு.க. செய லாளருமான அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.*

*இதில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரி சங்கர், மாநில பிரச்சாரக் குழுத் தலைவர் ஜெசி பொன் ராணி, உடன்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் மதன்ராஜ், முன்னாள் ஒன்றிய செயலாளர் சக்தி வேல், மாவட்ட பிரதிநிதி ராஜ பிரபு, மாவட்ட தொண்டரணிதுணை அமைப்பாளர் செந்தில், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் அருணகிரி, கானம் பேரூராட்சி முன்னாள் தலைவர் செந்தமிழ் சேகர், தளபதி எடிசன், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மகேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

### இந்தோனேசியாவில் கடல் நடுவே

# தீப்பிடித்த பயணிகள் கப்பல் - 5 பேர் உயிரிழப்பு! 41 பேர் மாயம்!

*ஜகார்தா, ஆக.3-*

*இந்தோனேசியாவில் கப்பல் விபத்துகள் சாதாரணமாக அரங்கேறுகின்றன.*

*இந்தோனேசியாவின் மதுரா தீவுக்கு அருகே கடலில் பயணிகள் படகு தீப்பிடித்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்ததாகவும், 41 பேரைக் காணவில்லை என்றும் தகவல் வெளியாகி உள்ளது.*

*இந்தோனேசியாவின் சுரபயாவில் இருந்து இன்று காலை மக்காசரை நோக்கி சுமார் 250க்கும் மேற்பட்ட பயணிகள் மற்றும் பணியாளர்களை ஏற்றிக்கொண்டு ‘முதியாரா செந்தோசா 2’ என்ற கப்பல் சென்றுள்ளது.*

*கப்பல் புறப்பட்ட சிலமணிநேரங்களிலேயே மதுரா தீவுக்கு அருகே தீவிபத்து ஏற்பட்டுள்ளது. உடனே இதுகுறித்து கப்பல் கேப்டன் தகவல் அளிக்க பலரும் பாதுகாப்பு ஜாக்கெட்டுகளை அணிந்துகொண்டு கடலில் குதித்துள்ளனர். கடலில் குதித்தவர்களை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.*

*இதனிடையே மற்றவர்கள் மாற்றுக் கப்பல்கள் மூலம் மாற்றப்பட்டு, கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கடலில் மாயமானவர்களை மீட்க அனைத்து பாதுகாப்பு முகமைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதாகவும் இந்தோனேசிய போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*படகில் தீ விபத்து ஏற்பட்டதற்கான துல்லியமான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. 17,000க்கும் மேற்பட்ட தீவுகளைக் கொண்ட இந்தோனேசியாவில், படகுப் போக்குவரத்து ஒரு பிரபலமான போக்குவரத்து முறையாகும்.*

*இங்கு, மோசமான பாதுகாப்புத் தரங்களால், போதுமான உயிர்காக்கும் உபகரணங்கள் இல்லாமலும், கப்பல்களில் அடிக்கடி அதிக சுமை ஏற்றப்படுவதால், விபத்துகள் சாதாரணமாக நிகழ்கின்றன.*



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத்தின் வேர்களைத் தேடி என்ற தலைப்பில், கழகத்தின் ஆணிவேராகத் திகழும் கிளைக் கழக நிர்வாகிகளை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது அதன் தொடர்ச்சியாக பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட கொடிவலச ஊராட்சி அத்திமாஞ்சேரிப் பேட்டை கிளை கழக நிர்வாகிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் சந்தித்து கலந்துரையாடினார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர் பி.டி. சந்திரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முரளி சேனா, நிர்வாகிகள் எம்.கே ராமச்சந்திரன், பி.டி. குமரேசன், வி. வி. மணி, பி.ஓ. வெங்கடேசன், பி.டி. ராஜேந்திரன், ராஜாராம், கோபி, மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்